(இ) தலைமை ஆசிரியர்களை அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களாக்கக் கோருகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) & (இ) ஆம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, முன்னுள் ஜில்லாபோர்டு ஆசிரியர்கள் சங்கம் ஒருமுறை இருமுறை அல்ல பல முறை, கிட்டதட்ட பத்து ஆண்டுகளாக ஜில்லா போர்டு கலைக்கப்பட்ட நாளிலிருந்து தங்களை சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை நிறைவேற்றப் படுவதாகத் தெரியவில்லை. அது மட்டுமல்லாமல் தலைமை ஆசிரியர்கள் தங்களை கெஜட் பதவி உள்ளவர்களாக ஆக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுடைய குறை என்னவென்றால், இப்போது D.E.O. என்பவர் தலைமை ஆசிரியரை விட ஜூனியர்களாக இருக்கிறார்கள். தலைமை ஆசிரியராக உள்ளவரை D.E.O வைப் பாருங்கள் என்றால் அவர் என்னைக் காட்டிலும் ஜூனியர் அவரைப் போய் நான் பார்த்தால் என்னுடைய கௌரவம் கெட்டுவிடும் நான் இருக்குமிடத்திற்கு வரச் சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். அப்படி டி.இ.ஓ. ஜூனியராக இருக்கிறார். ஜில்லா போர்டு ஹெட்மாஸ்டர் சீனியாராக இருக்கிறார். அவர்கள் பொசிஷனை சரியாக வைக்கவேண்டுமென்றால் தலைமை ஆசிரியர்களை கெஜட்டட் ஆபீசராக ஆக்கவேண்டும். ஜில்லா போர்டு ஆசிரியர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக மாற்றப்படவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இந்த விஷயத்தில் வியப்போ ஆச்சரியமோ பட அவசியமில்லை. டிஸ்ட்ரிக்ட் போர்டு நிர்வாகம் தனியாகவும் கவர்மெண்ட் தனியாகவும் இருந்தது. இரண்டையும் இண்டெக்ரேட் செய்யவேண்டுமென்ற கொள்கை 1966-ல் ஒப்புக் கொள்ளப்பட்டது. அவற்றில் சீனியாரிட்டி பிரச்னை, சம்பளப் பிரச்னை எல்லாம் வரும். ஒருவருக்கொருவர் பாதகமில்லாமல் அதைச் செய்யவேண்டும். இருதரப்பினரையும் கல்வி இயக்குனர் அவர்கள் சந்தித்துப் பேசி ஏகோபித்து ஒத்துக்கொள்ளக் கூடிய முடிவு பற்றி ஆராய்ந்து வருகிறார்கள். அந்த முடிவு கிடைத்த பிறகு வேறுபாடில்லாமல் பார்த்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : சீனியாரிடி பற்றி சொன்னார்கள். நம்முடைய நிர்வாகத்தில் குறிப்பிட்ட விகிதாசாரம் டைரக்டாக ரெக்ரூட்மெண்ட் செய்யவேண்டுமென்று இருக்கிறது. அப்படி வருபவரை தலைமையாசிரியர் தனக்கு ஜூனியர் என்று சொல்லமுடியாது. அப்படிச் சொல்வதும் பொருந்தாது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, சமீபத்தில் டிஸ்ட்ரிக்ட் போர்டு சர்வீசில் உள்ள உத்தியோகஸ்தர்களை எல்லாம் கவர்ன்மெண்ட் ஆபீசர்களாக, உத்தியோகஸ்தர்களாக ஆக்கப்பட்டதாக செய்தி வந்தது. அது உண்மையா ?

1st March 1969]

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : மறு நாளே அதில் திருத்தமும் வந்திருக்கிறது. இரண்டையும் சேர்த்துப் பார்த்தால் உண்மை தெரியும். அவர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருந்து வருகிறது.

Alternative schemes in the place of N.C.C.

*86 J.—THIRU V. SIVARAMURTI: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce any alternative schemes in the place of National Cadet Corps; and

(*b*) if so, the details thereof?

தேசீய மாணவர் படைக்குப் பதிலாக வேறு திட்டம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேசீய மாணவர் படைக்குப் பதிலாக வேறு திட்டங்களைச் செயலுக்குக் கொண்டுவரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) & (இ) தேசீய மாணவர் படைக்குப் பதிலாக மாற்றுத் திட்டங்கள் மேற்கொள்வது பற்றி பிரச்சனை முழுவதும் ஆராயப்பட்டு வருகிறது இதுபற்றி விவரங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, பள்ளி இறுதி வரையிலே முன்னர் பல காலம் தொடர்ந்து வந்த ஸ்கவுட் மூவ்மெண்ட் எடுக்கப்பட்டதால் நலம் பெருகுவது தடைப்பட்டிருக்கிறது என்பதை அரசு உணர்ந்து மீண்டும் பள்ளிகளில் ஸ்கவுட் மூவ்மெண்டை தொடருவதற்கு ஏற்பாடு செய்யுமா ? அந்த விஷயம் ஆலோசனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : ஸ்கவுட் மூவ்மெண்ட் முழுவதையும் எடுத்துவிட வில்லை: என்.சி.சி. எங்கும் வைக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக ஸ்கவுட் மூவ்மெண்டை இன்னும் விரிவு படுத்தலாமா என்பது ஆலோசனையில் ஒன்று.

திரு. சா. கணேசன் : என்.சி.சி; கல்லூரி அளவிலிருந்து தொடங்கவேண்டுமென்றும் ஹைஸ்கூல் அளவில் ஸ்கவுட் இருக்க வேண்டுமென்றும் வரையறை அமைத்தால் அதனால் பலன் மிகுதியாகக் கிடைக்குமென்பதை அரசு ஏற்றுக் கொண்டு அந்த வகையில் பரிசீலனை செய்து முடிவு காண முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இது ஒரு யோசனை. கேள்வியில் உள்ள பிரச்னை என்.சி.சி. இருக்கிற காரணத்தால் மொழிப் பிரச்னை வருகிறது. அதற்கு மாற்றுத் திட்டம் எப்படிக் கொண்டுவருவது என்று சொல்லும்போது ஸ்கவுட்டை கொண்டு வரலாமா என்ற கருத்து நிலவுகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : ராஜ்ய சர்வீஸ் கமிஷன், மத்திய சர்வீஸ் கமிஷன் அளிக்கும் கேள்வித் தாள்களில் என்.சி.சி. பற்றிக் கேள்விகள் கேட்கப் படுகின்றன. பல்கலைக் கழகத்தில் கேட்கப்படுகிறது. அதை இந்த அரசைப் பொருத்த வரையில் மாற்றியிருக்கிறதா ? சமீபத்தில் நான் பார்த்த ஒரு மாணவனுடைய கேள்வித்தாளில் என்.சி.சி. இருக்கிறதா என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : என்.சி.சி. வேண்டுமென்றில்லை. எக்ஸ்ட்ரா கர்ரிகுலர் ஆக்டிவிட்டீஸ் என்பதில் கேட்கப்பட்டது. கொள்கைப் பிரச்னையில் முடிவு கண்டவுடன் அதைப் பற்றி யோசிக்கலாம்.

THIRU D. SANTOSHAM : Sir, it is the unanimous opinion of all educationist that when the N.C.C. was taken away, even the valuable bit of training in discipline that the students were having has been lost. Recently the Madurai University Senate has also passed a resolution regretting that this training has been denied to our students, and it has requested the authorities concerned including the State Government that the N.C.C. training with the English words of command should be reintroduced if possible; if not, at least some alternative should be introduced very soon. Now this matter has been pending for a fairly long time. May I know whether the Government will complete the examination of this matter very soon and introduce some kind of training at least from the next academic year?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : என்.சி.சியில் கொடுக்கப் படுகிற பயிற்சி மாணவர்களுக்குத் தேவை என்று இந்த அரசு கருதுகிறது. அவர்கள் சொல்லியதைப்போல் மதுரைப் பல்கலைக் கழகம் என்.சி.சி. வேண்டுமென்று சொல்வதோடு நிற்கவில்லை. ஆங்கிலத்தில் உத்தரவுகளைச் சொல்ல வேண்டுமென்று தெரிவித்தார்கள். அந்த அதிகாரம் நம்மிடத்தில் இல்லை. டெல்லியில் இருக்கிறது. கடந்த ஒரு ஆண்டில் முன்னாள் முதலமைச்சருக்கும் அங்குள்ள பாதுகாப்பு அமைச்சருக்கும் கடிதப் போக்குவரத்து ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் கொஞ்சம் கூட விட்டுக் கொடுப்பதாகத் தெரியவில்லை. இந்தியை வைத்துத்தான் தீருவோம் என்று சொல்கிறார்கள். நாம் கூடாது என்று எதிர்த்து வருகிறோம். அந்த முடிவு வருவதற்கு முன்னால் அடுத்த ஆண்டிலிருந்து எந்த விதத்திலாவது பயிற்சி கொடுக்க வேண்டும் என்றும் அதை எப்படிக் கொடுக்கலாம் என்றும் ஆராய்ந்து வருகிறது அரசு.

THE A. R. DAMODARAN : Sir, may I know how many words of command are made in Hindi in the N.C.C. that we the State and the Central Government should be fighting over this very small matter?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : சொற்களின் எண்ணிக்கையைப் பொறுத்து பிரச்னை அமைவதில்லை. ஆங்கிலம் வேண்டுமா இந்தி வேண்டுமா என்பதுதான் பிரச்னை. அவர்கள் இந்தி வேண்டுமென்கிறார்கள். நாங்கள் ஆங்கிலம் வேண்டுமென்கிறோம்.

Perijam Lake

* 87 *Q*.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the agriculturists from Palani and Periyakulam have asked for permission to irrigate paddy crops from the Perijam lake in the Kodaikkanal taluk and the boating lake in the Kodaikkanal town;

(*b*) whether the Palani Municipality required the water for its water-supply scheme; and

(*c*) if so, the action taken thereon?

பேரீஜம் ஏரி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) கொடைக்கானல் தாலுகாவில் உள்ள பேரீஜம் ஏரியிலிருந்து கொடைக்கானல் நகருக்குள் படகு விடும் ஏரியிலிருந்தும் பழனி பெரியகுளம் விவசாயிகள் நெற் பயிருக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு அனுமதி கேட்டனரா ?

(இ) குடி தண்ணீருக்குப் பழனி முனிசிபாலிட்டி தண்ணீர் கேட்டதா ?

(உ) ஆம் எனில், அவைகளின் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாஷா : (அ) & (இ) ஆம்.

(உ) அந்த வேண்டுகோட்கள் நிறைவேற்றப்பட்டன.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சில நாட்கள்தான் அங்கே தண்ணீர் விடப்பட்டது என்றும் அது விவசாயத்திற்குப் போதவில்லை என்றும் கூறி மனு செய்தார்கள். மீண்டும் தண்ணீர் வேண்டுமென்று கேட்டால் பேரீஜம் ஏரியிலிருந்து தண்ணீர் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : விதி முறைகளை அனுசரித்துத் தண்ணீர் கொடுக்கப்படும்.